[29th January 1966

கழிந்த பிறகு உள்ள தகுதி அடிப்படையாகக் கொள்ளப் படுகிறதா? அல்லது பெறப்பட்ட காலத்தில் இருந்த நிலைமையைக் கருதி கொடுத்த பணத்தை திரும்ப வாங்க வேண்டுமென்றோ அல்லது ஸ்காலர்ஷிப் கொடுத்தது சரியென்றோ முடிவு செய்கிறதா? எந்த முறையை அரசாங்கம் பின்பற்றுகிறது என்று அறியலாமா?

கனம் திரு. பூ. கக்கன் : பெறப்பட்ட அந்த வருஷத்தில் இருந்த நிலைமையை எண்ணித்தான் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இன்கம் சர்ட்டிஃபிகேட் கொடுப்பதிலே அதிகாரிகள் கொடுக்கும்போது, விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு இன்கம் சர்ட்டிஃபிகேட் கொடுக்கும்போது, வருமானம் ரூ. 1,800-க்குள் என்று கொடுத்த பிறகு, சில ஆண்டுகள் கழித்து வேண்டுமென்றே யாராவது வருமானம் அதிகமாக இருக்கிறது என்று எழுதிவிட்டாலும், அப்போது புகார் பரிசீலனைக்கு வரும்போது, குறிப்பிட்ட ஆண்டில் வருமானம் எவ்வளவு என்று கணக்கு எடுப்பது சிரமமாக இருக்கிறது, அதிகாரிகள் பொறுப்பு என்றும் சொல்ல முடியாத நிலை இருப்பதால், இந்த மாதிரி சான்றிதழ்கள் கொடுத்து ஸ்காலர்ஷிப் வாங்கியவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அதிக தண்டனை கொடுக்கும் அளவில் முயற்சி எடுக்காமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பல பல புகார்கள் வருகின்றன. பல பல கோரிக்கைகள் வருகின்றன. எல்லாவற்றையும் பார்த்து அரசாங்கம் நல்ல முடிவுக்கு வருகிறது. எல்லாவற்றையும் பார்த்துத்தான் உதவி பண்ணலாமா, பண்ணக் கூடாதா என்ற முடிவுக்கு அரசாங்கம் வருகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

* 10 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, அரசாங்கப் பாலிடெக்னிக்கில் பயின்றுவரும் மாணவர்களுக்கு, ஹரிஜன நல இலாகாவினரால் உபகாரச் சம்பளத்திற்கென (Scholarship) வழங்கப்பட்ட செக்குகள் ஸ்டேட் பாங்கில் நிராகரிக்கப்பட்டனவென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

29th January 1966]

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த ஒரு பையன் தனக்கு வந்த ஸ்காலர்ஷிப் செக்கை எடுத்துக் கொண்டு பாங்குக்குச் சென்று மாற்ற முயற்சித்தபோது, ' அந்த இனத்தில் பணம் இல்லை, இரண்டு நாட்கள் கழித்துக் கொண்டு வா ' என்று அனுப்பி விட்டார்கள் . . .

கனம் சபாநாயகர் : கனம் அமைச்சர் அவர்கள்தான் தகவல் இல்லை என்று சொல்லுகிறார்களே.

திரு. து. ப. அழகமுத்து : பணம் இல்லாமல் செக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ?

MR. SPEAKER : The Minister has replied that he has no such information. How can the hon. Member's question be answered now? He will have to write to the Minister saying that on such and such dates cheques presented by such and such students were rejected.

திரு. து. ப. அழகமுத்து : எழுதி அனுப்பினால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்வார்களா ?

MR. SPEAKER : If the hon. Member writes a letter to the Minister giving specific cases, then the Minister will take action and send a reply. If the hon. Member wants any further elucidation on the reply, then he can give notice of a separate question.

Accommodation allowance to the Assistant Public Prosecutors

* 11 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal before the Government to grant accommodation allowances to the Assistant Public Prosecutors of Grades I and II in the State ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இவர்களும் அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்கள். அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுப்பது போல் இவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுப்பது பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் இப்பொழுது தான் பதில் சொன்னேன். ஏதோ சில தீர்மானங்கள் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை உயர் நீதிமன்றத்தின் யோசனைக்கு அனுப்பியிருக்கிறோம். உயர் நீதி மன்றத்தின் அபிப்பிராயம் கிடைத்த பிறகு என்ன செய்யலாம் என்பது பற்றி பரிசீலனை செய்கிறோம்.